10/=

பக்கங்கள் 06

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 101 வெள்ளிக்கிழமை ஓகஸ்ட் 25 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## எதிரணியின் கோரிக்கை வாக்கெடுப்பில் தோல்வி

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (திருத்த) சட்டமூல விவாதத்தின்போது ஒன்றிணைந்த எதிரணி முன்வைத்த யோசனை வாக்கெடுப்பின்போது தோல்வியடைந்துள்ளது.

கிராம அதிகாரி, சமுர்த்தி அதிகாரிகள் ஆகிய கள அலுவலகர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளராக பங்குபற்ற முடியாது என, குறித்த சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பினை வெளியிட்டனர்.

குறித்த விடயத்தில் திருத்தம் செய்யுமாறு அவர்கள் வலியுறுத்தினர். இதனால் சபையில் குழப்பம் ஏற்பட்டது. இறுதியில் இது தொடர்பில் வாக்கெடுப்பொன்றை நடத்துமாறு ஒன்றிணைந்த எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்தன யோசனையை முன்வைத்தார். அதனையடுத்து, இலத்திரனியல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போது குறித்த யோசனைக்கு ஆதரவாக 43 வாக்குகளும் எதிராக 117 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. (எ)


## உயர்தரப் பரீட்சை ஒரு நாள் ஒத்திவைப்பு



எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி இடம்பெறவிருந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பொது அறிவுப் பாடத்துக்கான பரீட்சையை, 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்கு, கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது எனக் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

எதிர்வரும் 2ஆம் திகதி, முஸ்லிம்கள் ஹஜ் பெருநாள் தினத்தை கொண்டாடுவதால், அன்று இடம்பெறவிருந்த மேற்குறித்த பாடத்துக்கான பரீட்சையைப் பிற்போடுமாறு, அமைச்சர் றிஷாட் பதியுதீன், எழுத்து மூலம் விடுத்த வேண்டுகோளை ஏற்றே, தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக, அமைச்சர் அகிலவிராஜ் அறிவித்துள்ளார். (எ)

## உள்ளூராட்சி சட்டமூலம்
# நிறைவேற்றம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (திருத்த) சட்டமூலம் 76 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்டமூலத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. முன்னதாக, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (திருத்த) சட்டமூலம் தொடர்பில் இடம்பெற்ற விவாதம் காரணமாக நாடாளுமன்றில் சூடான நிலை ஏற்பட்டது. சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பை நடத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் இழுபறி நிலை ஏற்பட்டது. இறுதியில் இது தொடர்பில் வாக்கெடுப்பொன்றை நடத்துமாறு ஒன்றிணைந்த எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன யோசனையை முன்வைத்தார். இதனையடுத்து சட்டமூலம் தொடர்பான வாக்கெடுப்பை நடத்த சபாநாயகர் தீர்மானித்தார். அதன்படி இடம்பெற்ற வாக்கெடுப்பில் 76 பெரும்பான்மை வாக்குகளால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. (எ)


## “விஜயகலாவை கைது செய்”
### கொழும்பில் ஆர்ப்பாட்டம்




புங்குடுதீவு மாணவி வித்யாவின் படுகொலை வழக்கை துரிதப்படுத்துமாறு கோரி கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது அமைச்சர் விஜயகலாவை கைது செய்ய வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டதோடு, அவருக்கு எதிரான பதாகைகளும் ஆர்ப்பாட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டன.

தேசிய மகளிர் வழக்கறிஞர்கள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம், கொழும்பிலுள்ள ஐ.நா. தலைமைக் காரியாலயத்துக்கு முன்னால் இன்று காலை நடைபெற்றது. இதன்போது அரசாங்கத்துக்கு எதிராகவும் கோஷங்கள் 06

## வீட்டுக்குள் கஞ்சா
### மூவருக்கு மறியல்



யாழ். சாவகச்சேரியில் வீடொன்றில் மறைத்து வைத்து கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டதாகக் கைதான மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தலைமைப்பீட பிரதான பொலிஸ் பரிசோதகர் விக்ரமசிங்கவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கைதடிப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் சாவகச்சேரி பொலிஸார் நேற்றிரவு சோதனை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனையின் போது குறித்த வீட்டில் மறைத்து வைத்து விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ நூறு கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. இதன் போது 33, 32 மற்றும் 26 வயதுகளையுடைய 06

## நீதி, புத்தசாசன அமைச்சர்கள்
# பதவியேற்பு





இலங்கையின் நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர்கள் இன்று பதவியேற்றனர்.

நீதி அமைச்சராக தலதா அத்துகோரளவும், புத்தசாசன அமைச்சராக காமினி ஜெயவிக்ரம பெரேராவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இன்று முற்பகல் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.

அமைச்சரவை முடிவை விமர்சிக்கும் 06

## துன்னாலை இளைஞர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

துன்னாலையில் கைது செய்யப்பட்ட 39 பேரையும் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துன்னாலையில் மண் அகழ்வின் போது பொலிஸாரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இதனையடுத்து அங்கு வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டிருந்தன.

வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறி 39 இளைஞர்களை பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை 06

## இராணுவத்துக்கு வாள்வெட்டு: ஆறுபேர் இன்று கைது!



கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் இராணுவத்தினர் மீது வாள்வெட்டுத் தாக்குதலில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் 6 பேர் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தில் பணியாற்றும் இரு தமிழ் இளைஞர்கள் விடுமுறையில் தமது சொந்த ஊரான ஊற்றுப்புலத்துக்கு வந்தனர். அவ்வாறு வந்தவர்கள் மீதே நேற்றிரவு இனந்தெரியாதோர் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டனர்.இதில் இராணுவத்தைச் சேர்ந்த இருவரும் பலத்த காயமடைந்தனர். இருவரும் உடனடியாகக் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். 06

# பட்டதாரிகளுக்கு ஒருவாரத்தில் நியமனமாம்!

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இணைத்துக் கொள்ளப்படும் 20 ஆயிரம் பட்டதாரிகளுக்கான அபிவிருத்தி உதவியாளர் நியமனக் கடிதங்கள் அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளதாக அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த நியமனத்துக்கான விண்ணப்பங்கள் கோரலின் முடிவுத்திகதி 08.09.2017 எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையில் இலங்கை அரசின் உத்தியோகபூர்வ இணையத்தளம் குறித்த செய்தியை வெளியிட்டுள்ளது.

மாவட்டச் செயலகங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் விபரங்களுக்கு அமைவாக குறித்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதுகுறித்து அரச ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைய 20 ஆயிரம் பேர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இவர்கள் பிரதேச செயலக அலுவலகங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். அரசாங்கத்தின் பொருளாதார வலய வேலைத்திட்டத்தைப் பிரதேச மட்டத்தில் அமுலாக்குவது நியமனம் பெறுவோரின் பிரதான பணியாக அமையும்."- என்றுள்ளது.



# எட்டாண்டு திட்டம்

## ரணில், மைத்திரி அறிவிப்பர்

சமகால இணக்கப்பாட்டு தேசிய அரசாங்கத்தின் அடுத்த எட்டாண்டுக்கான தொலை நோக்கை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் எதிர்வரும் நான்காம் திகதி மக்கள் முன் சமர்ப்பிக்கவுள்ளனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரட்ன இதனைத் தெரிவித்தார். அரசாங்கத்தின் தொலைநோக்கு அறிமுகம் செய்யப்படுவதை அடுத்து நாட்டில் துரித பொருளாதார சமூக அபிவிருத்தி ஆரம்பமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.(உ)

# ஓ.எல்.க்கு முன் தேர்தலை நடத்த கோரிக்கை

இவ்வாண்டு டிசெம்பரில் இடம்பெறவுள்ள, கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதர பரீட்சைக்கு முன்பாக, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு, மக்கள் விடுதலை முன்னணி, அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமாகிய அநுர குமார திஸாநாயக்க, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (திருத்தம்) சட்டமூலம் தொடர்பான விவாதத்தில், நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே, இவ்வாறு கோரிக்கையை முன்வைத்தார். சட்டமூலத்துக்கான திருத்தங்கள், செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே, இவ்வாண்டில் இத்தேர்தல்களை நடத்த முடியுமென, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தாரென, அவர் குறிப்பிட்டார். ஆகவே, இத்திருத்தங்கள், இவ்வாரத்துக்குள் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். (உ)

## மைத்திரி வசமுள்ள

# அமைச்சு வீழ்ச்சி



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொறுப்பில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு உள்ளது.

இந்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில், அரையாண்டில் 3.3 வீதத்தை மட்டுமே குறித்த அமைச்சு செலவிட்டுள்ளதாக அரசாங்கத்தின் அதிகாரபூர்வ புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இதன் மூலம், அமைச்சுக்களின் மோசமான வினைத்திறன் கொண்ட அமைச்சாக, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு அடையாளம் காணப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டில், அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஜனவரி முதல் ஜூன் வரையான ஆறு மாத காலத்தில் அமைச்சுக்கள் செலவீடு செய்துள்ள நிதி பற்றிய தகவல்கள் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இதற்கமைய, அரசாங்கத்தில் உள்ள இரண்டு அமைச்சுக்கள் மாத்திரமே, ஒதுக்கப்பட்ட நிதியில் 50 வீதத்துக்கு மேல் செலவிட்டுள்ளன.

சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, இந்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில், 70.4 வீதத்தை முதல் ஆறு மாதங்களில் செலவிட்டுள்ளது. அடுத்ததாக, அஞ்சல் மற்றும் அஞ்சல் சேவைகள் அமைச்சு, ஒதுக்கப்பட்ட நிதியில், 50.5 வீதத்தை செலவழித்துள்ளது. டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு, 3.9 வீதமான நிதியை செலவிட்டுள்ளது. சுற்றுலா அமைச்சு 6.8 வீதமும், பொதுத்துறை நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சு 5.9 வீதமும், தமக்கான ஒதுக்கீடுகளை செலவிட்டுள்ளன என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (உ)



# விஷேட தேவையுடைய சிறுவனுக்கு உதவி

வவுனியாவில் வர்த்தக பிரமுகர்களினால் விஷேட தேவைக்குட்பட்ட சிறுவனுக்கு மலசலகூடத்துடன் படுக்கை அறை அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வர்த்தகர் சங்கத்திலுள்ள வர்த்தகப்பிரமுகர்கள் ஒன்றிணைந்து விஷேட தேவைக்குட்பட்ட 15 வயதுடைய சிறுவன் ஒருவனுக்கு படுக்கை அறையுடன் கூடிய மலசலகூட கட்டடத் தொகுதியை அமைத்துக்கொடுத்துள்ளனர்.

இந்நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. வவுனியா மாமடு, நெலுங்குளம் பகுதியில் வசித்து வரும் அனோமாகுமாரி என்பவரின் மகனான நிலுஷ லக்மால் என்ற 15 வயதுடைய விஷேட தேவைக்குட்பட்ட சிறுவனுக்கே குறித்த உதவி வழங்கப்பட்டுள்ளது. கணவனின் உதவி இன்றி மகனைப் பராமரிப்பதில் சிரமத்தை எதிர்நோக்கிய அவர் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனிடம் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தார். அவர் குறித்த தகவலை வவுனியா வர்த்தகர் சங்க பிரமுகர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து வர்த்தகப் பிரமுகர்கள் 4 பேர் ஒன்றிணைந்து குறித்த உதவியை வழங்கியுள்ளனர். (உ)

# சார்க் முதலீட்டாளர்கள் மாநாடு கொழும்பில்

இலங்கையில் தெற்காசியாவின் ஆற்றலை விடுவித்தல் என்ற தொனிப்பொருளில் சார்க் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சார்க் அங்கத்துவ நாடுகள் மத்தியில் அதிகளவில் சமூக பொருளாதார ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கம் ஆகும். (உ)

# கட்டுமானக் கண்காட்சி கொழும்பில் ஆரம்பம்

கட்டுமானத் துறைசார்ந்த கன்ஸ்ரக் 2017 தேசிய கண்காட்சி இன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியது.

தேசிய கட்டுமானச் சங்கம் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறும். கட்டுமானத் துறைசார்ந்த புதிய முன்னேற்றங்களை கண்காட்சியில் நேரில் காணமுடியும். இங்கு அரச தனியார் துறை சார்ந்த நிறுவனங்களின் காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (உ)

# உள்ளூராட்சி சேவைகளை மேம்படுத்தும் திட்டம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சேவைகளை மேம்படுத்தும் திட்டத்துக்கான முன்னேற்ற பரிசீலனைக் கூட்டம் இன்று ஹபரணையில் ஆரம்பமாகியது. இந்தக் கூட்டம் இன்றும் நாளையும் இடம்பெறுகின்றது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஏழு வருடங்களுக்கு முன்னர் இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருந்தது. போர் அனர்த்தங்களால் சீர்குலைந்த உள்ளூராட்சி நடைமுறையை சீரமைப்பது திட்டத்தின் நோக்கம்.

இதற்கு உலக வங்கிநிதி உதவி வழங்கியுள்ளது. (உ)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

# இளைஞர் நாடாளுமன்ற அமர்வு

நான்காவது இளைஞர் பாராளுமன்றத்தின் நான்காம் அமர்வு இன்று இடம்பெற்றது. மஹரகம தேசிய இளைஞர் மன்றத்தில் அமைந்துள்ள இளைஞர் நாடாளுமன்ற கட்டடத்தில் குறித்த அமர்வு நடைபெற்றது. இளைஞர் நாடாளுமன்ற அமர்வில் பிரதம அதிதியாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கலந்து கொண்டார்.

ஜனநாயகத்துக்காக இளைஞர்களின் பங்களிப்பு என்ற தொனிப்பொருளில் அவர் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து அதே தலைப்பில் விவாதம் இடம்பெற்றது. (உ)



# 19 பேரையும் நீக்குக!




தமிழகத்தின் ஆளும் கட்சியான அ.இ.அ.தி.மு.க வில் டிடிவி தினகரன் அணியில் உள்ள 19 சட்டமன்ற உறுப்பினர்களையும் சபாநாயகர் தகுதி நீக்கம் செய்ய வேண்டுமென தமிழக அரசின் கொறடா ராஜேந்திரன் பரிந்துரைத்துள்ளார்.
அ.தி.மு.கவில் பிளவுபட்டிருந்த எடப்பாடி அணியும் ஓ.பன்னீர்செல்வம் அணியும் ஒன்றாக இணைந்துவிட்ட நிலையில், ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் உறவினரான டிடிவி தினகரன் தனி அணியாகச் செயற்பட்டு வருகிறார். 19 சட்டமன்ற உறுப்பினர்கள் அவருக்கு வெளிப்படையாக ஆதரவளித்துள்ளனர்.
இந்த நிலையில் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, அமைச்சர்களுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். சபாநாயகர் தனபாலையும் அவருடைய அலுவலகத்தில் முதலமைச்சர் திடீரெனச் சந்தித்தார்.
இதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக அரசின் தலைமைக் கொறடா ராஜேந்திரன், இந்த 19 சட்டமன்ற உறுப்பினர்களையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டுமெனக் கோரியிருப்பதாகத் தெரிவித்தார். (இ)



# தடை! அதை உடை!!

கடும் எதிர்ப்பின் மத்தியிலும், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பொப் பாடகி அர்யானா சயீத் நடத்திய இசை நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான இளம் ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்றுள்ளனர்.
இந்நிகழ்ச்சிக்கு பழமைவாதிகளிடமிருந்து எதிர்ப்பு மற்றும் தாக்குதல் அச்சுறுத்தல்கள் வந்திருந்தன.
பாடகி அர்யானா இஸ்லாம் மதத்துக்கு விரோதமான முறையில், ஆடை அணிந்தபடி மேடையில் பாடுவதாகப் பழமைவாதிகள் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.
இந்நிலையில் அவர் காபூலில் நிகழ்ச்சி நடத்தினால் குண்டுகளை வெடிக்க வைப்போம் எனப் பல மிரட்டல்கள் விடுக்கப்பட்டன.
ஆப்கான் நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட அர்யானாவின் இசை நிகழ்ச்சி, முதலில் காஜி மைதானத்தில் நடப்பதாக இருந்தது.
இதற்காக மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ரிக்கெற்றுகள் விற்கப்பட்டன.
ஆனால், நிகழ்ச்சி நடக்கும் இடத்தின்பாதுகாப்பு குறித்து தங்களால் உத்திரவாதம் அளிக்க முடியாது என அதிகாரிகள் கூறினர்.
நிகழ்ச்சியை நடத்தியே தீர வேண்டும் என பாடகி அர்யானா சயீத் உறுதியாக இருந்ததால், வேறு இடத்தில் நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. (இ)

# கட்டார் அதிரடி!



ஈரான் நாட்டுடனான தொடர்பை கட்டார் துண்டிக்க வேண்டும் என்னும் நான்கு அரபு நாடுகளின் வற்புறுத்தலையும் மீறி, ஈரானுடனான இராஜாங்க உறவுகளைக் கட்டார் முழுமையாகப் புதுப்பித்துள்ளது.
இஸ்லாமின் ஷியா பிரிவைச் சேர்ந்த மதகுரு ஒருவர் 2016ஆம் ஆண்டு சவுதி அரேபியாவில் தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்து ஈரானில் இருந்த சவுதித் தூதரகங்கள் தாக்குதலுக்கு ஆளாகின.
இதனையடுத்து கட்டார் ஈரானில் இருந்த தனது தூதரக அதிகாரிகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டது.
இந்த நிலையில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எகிப்து மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் ஈரான் நாட்டுடன் அளவுக்கு அதிகமாக நெருக்கம் காட்டுவதாக கட்டார் மீது குற்றம் சாட்டின. ஆனால், அவற்றைக் கட்டார் திட்டவட்டமாக மறுத்தது.எனினும் அரபுநாடுகள் கட்டார் மீது பொருளாதாரத் தடை விதித்தபோது , ஈரானே கட்டாருக்குத் தேவையான உதவிகளை அளித்தது. இதனால் ஈரானுடன் மீண்டும் இராஜாங்கத் தொடர்பைப் புதுப்பிக்க இருப்பதாகக் கட்டார் அறிவித்துள்ளது. விரைவில் கட்டாரின் தூதரகம் ஈரானில் இயங்க ஆரம்பிக்கும் எனவும் கூறப்படுகின்றது. (இ)

# டிரம்பின் "புஸ் புஸ்"!




தேர்தல் பிரசாரத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தனக்குப் பின்னால் நின்று "புஸ் புஸ்" என்று மூச்சு விட்டு அசௌகரியப்படுத்தினார் என்று ஹிலாரி குற்றம் சாட்டியுள்ளார்.
"செயின்ட் லூயிஸ் நகரில் கடந்த ஒக்ரோபர் மாதம் தேர்தலுக்கான பொது விவாதம் நடந்தது. அது ஒரு குறுகிய மேடை. நான் பேசிக் கொண்டிருந்தேன். டிரம்ப் வெகு அருகே நின்று கொண்டிருந்தார்.
எனக்குப் பின்னால் நின்றிருந்த அவர் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரைப் பற்றிய ஒரு சர்ச்சை முதல் நாள் தான் வெடித்திருந்தது. அதுதான் ஒரு பெண்ணிடம் அவர் அத்துமீறியதாக வந்த புகார். அது வேறு ஞாபகத்துக்கு வந்து என்னை நெளிய வைத்தது.
எனது கழுத்தில் "புஸ் புஸ்" என்று அவரது மூச்சுக் காற்று பட்டதால் அசூயையாக இருந்தது.
நெளிந்தபடி பேசிக் கொண்டிருந்தேன். எனக்கு அது பெரும் அசௌகரியமாக இருந்தது.
அந்த மேடையில் நான் எங்கெல்லாம் போய் பேசினேனோ அவரும் என்னைப் பின் தொடர்ந்தபடியே வந்தார். நின்றார்.
தர்மசங்கடத்தைக் கொடுத்தார்.
உற்றுப் பார்த்தபடியே இருந்தார்.
அன்று நான் பட்ட கஷ்டத்தைச் சொல்ல வார்த்தைகளே இல்லை."
என்று ஹிலாரி தனது தேர்தல் அனுபவம் பற்றிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ)

# பாகிஸ்தானின் பதில் என்ன?



பாகிஸ்தானில் தொடரும் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் பற்றி கண்டித்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்புக்கு என்ன பதில் சொல்வது என்பது பற்றி பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி உள்ளிட்டோருடன் பாகிஸ்தான் பிரதமர் அபாஸி அவசர ஆலோசனை நடத்தியுள்ளார்.
அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடந்த 22ஆம் திகதி தொலைக்காட்சி உரையொன்றில் பாகிஸ்தானை கடுமையாகச் சாடினார்.
"குழப்பம், வன்முறை, பயங்கரவாதம் ஆகியவற்றுக்குப் பாகிஸ்தான் புகலிடமாக விளங்குகிறது.
பாகிஸ்தான், மக்களை கொன்று குவித்து வருகிற பயங்கரவாத அமைப்புகளுக்குப் புகலிடம் தந்து கொண்டிருக்கிறது. பாகிஸ்தானுக்கு பல்லாயிரம் கோடிக் கணக்கில் நாம் நிதி உதவி அளித்துக் கொண்டிருக்கிறோம்.
ஆனால் நாம் யாருக்கு எதிராகவெல்லாம் சண்டை போட்டு வருகிறோமோ, அவர்களுக்குப் பாகிஸ்தான் சொர்க்கபுரியாக உள்ளது. இதில் உடனடியாக மாற்றம் வரவேண்டும்" என்று கண்டித்தார் டிரம்ப்.
இது பாகிஸ்தானுக்குப் பேரிடியாக அமைந்தது.
எனவே இது தொடர்பாக பாகிஸ்தான்பிரதமர் அபாஸி, இஸ்லாமாபாத்தில் தனது இல்லத்தில் நேற்று அவசர கூட்டம் ஒன்றைக் கூட்டினார். இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சரும், முப்படைத்தளபதிகளும், இராணுவ ஆலோசகர்களும் கலந்துகொண்டனர்.
ஆயினும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை. (இ)

# ரஷ்யத் தூதர் மர்ம மரணம்



ஆபிரிக்க நாடான சூடானின் ரஷ்யத் தூதராகப் பணியாற்றி வந்த மிர்கயாஸ் சிரின்ஸ்கை (வயது-62) நேற்று முன்தினம் அவரது வீட்டில் உள்ள நீச்சல் குளத்தில் பிணமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார். காலையில் அவரை அறையில் காணாததால் , பணியாளர்கள் அவரைத் தேடியபோதே நீச்சல் குளத்தில், அவரது உடல் மிதந்து கொண்டிருப்பதைக் கண்டனர். உடனடியாக வீட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மருத்துவக் குழுவை வரவழைத்தனர்.
மருத்துவர்கள் அவரது உடலை மீட்டெடுத்து பரிசோதித்த போது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக அறிவித்தனர்.
மிர்கயாஸ் சிரின்ஸ்கைக்கு உயர் இரத்த அழுத்த நோய் இருந்ததாகத் தெரிகிறது.
எனவே அவர் நீச்சல் குளத்தில் இரவில் குளித்த போது மூச்சுத் திணறி இறந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.(இ)

# 'ஹாடோ' புயல் சீனாவில் தாண்டவம்



சீனாவின் தென்பகுதியை 'ஹாடோ' புயல் நேற்று தாக்கியது. இதன் காரணமாக ஜுஹாய் நகரில் பலத்த மழை பெய்தது.
இதனால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன.
ஹொங்காங்கில் புயல் எச்சரிக்கை '10' என்ற அதிகபட்ச அளவுக்கு வெளியிடப்பட்டுள்ளது.
சீனாவில் இந்தப் புயல், மழை பாதிப்பின் காரணமாக 27 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக அரச ஊடகம் கூறியுள்ளது.
நிலச்சரிவு, வெள்ளம், பிற இயற்கைச் சீரழிவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் இருப்பதாகச் சீன அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
ஹொங்காங்கில் மணிக்கு 175 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என வானிலை ஆராய்ச்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.
சீனாவில் ஹாடோ புயலுக்கு மொத்தம் 12 பேர் பலியாகி உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ஐரோப்பாவின் தலைமகன்



ஐரோப்பிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பு, ஒவ்வொரு ஆண்டும் சிறந்த வீரரைத் தெரிவுசெய்து விருது வழங்கிக் கௌரவித்துவருகிறது.

அதன்படி இந்த வருடத்தின் தலைசிறந்த வீரர் விருதை ரொனால்டோ பெற்றுள்ளார்.

உதைபந்தாட்ட உலகின் தலைசிறந்த வீரர்கள் பட்டியலில் போர்த்துக்கல் அணித்தலைவரும், ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான ரொனால்டோவுக்கு முக்கிய இடம் உண்டு.

இந்த வருடம் தனது சிறப்பான ஆட்டத்தால் ரியல் மாட்ரிட் அணியைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தைக் கைப்பற்ற வைத்தார். இந்தத் தொடரில் மாத்திரம், அவர் 12 கோல்களை அடித்து ரசிகர்களை மகிழ்வித்தார்.

இந்த வருடத்துக்கான சிறந்த வீரர் விருதுப் பட்டியலில் ஆர்ஜென்ரீனா மற்றும் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரான மெஸ்ஸியும் இருந்தார்.

எனினும், ரொனால்டோ, மெஸ்ஸியை வீழ்த்தி மூன்றாவது முறையாக விருதை வென்றார். மெஸ்ஸி இந்த விருதை இரண்டு தடவைகள் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் பிரிவில் இந்த விருதை நெதர்லாந்து அணியின் மார்டேன்ஸ் என்ற வீராங்கனை பெற்றார். இவர் ஐரோப்பிய சம்பியன்ஷிப் தொடரை நெதர்லாந்து வெல்ல முக்கிய காரணமாக இருந்தவர். (ஒ)

## உலக குத்துச்சண்டை இன்று ஆரம்பம்



19ஆவது உலக குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டி ஜேர்மனியில் உள்ள ஹம்பர்க் நகரில் இன்று முதல் செப்ரெம்பர் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

10 வகையான உடல் எடைப்பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன. இந்தப் போட்டிகளில் 85 நாடுகளைச் சேர்ந்த 280 வீரர்கள் கலந்து கொள்கிறார்கள். (ஒ)

## இணையத்தில் 'விவேகம்' படக்குழு அதிர்ச்சி



அஜித் நடிப்பில் நேற்று வெளியாகியிருக்கும் 'விவேகம்' திரைப்படம் இணையத்தில் முழுமையாக வெளியானதால் ரசிகர்களும், திரையுலகத்தினரும் அதிர்ச்சியில் உள்ளனர்.

இயக்குநர் 'சிறுத்தை' சிவா இயக்கத்தில், 'அல்டிமேட் ஸ்டார்' அஜித் நடிப்பில் 'விவேகம்' திரைப்படம் நேற்று உலகம் முழுவதும் வெளியாகியது. இதில் விவேக் ஒபராய், காஜல் அகர்வால், அக்ஷரா ஹாசன் ஆகியோர் நடித்துள்ளனர்.

சுமார் மூன்று ஆண்டுகள் தயாரிப்பில் உருவான இந்தத் திரைப் படத்தை அஜித் ரசிகர்கள் பெரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

ஆனால், அவர்களுக்கு அதிர்ச்சியூட்டும் விதமாக படம் வெளியாக முன்னரே சில குறிப்பிட்ட இணையத்தளங்களில் இந்தத் திரைப்படம் முழுமையாக வெளியாகிவிட்டது. பலர் இந்தப் படத்தை பதிவிறக்கம் செய்து பார்த்த விபரமும் தெரிய வந்துள்ளது.

அத்துடன் திரை அரங்கத்திலிருந்து ரசிகர்கள் சிலர் தங்களது முகநூல் பக்கத்தில், இப்படக் காட்சிகளை 'பேஸ்புக் லைவ்' முறையில் பதிவிட்டு வருகிறார்கள். இந்தத் தகவல்கள் ரசிகர்கள் மற்றும் திரையுலகினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.(ஒ)





## ஒப்பந்தம் நீடிப்பு

சுவீடனின் முன்னணி உதைபந்தாட்ட வீரரான ஸ்லாடன் இப்ராஹிமோவிசுடனான ஒப்பந்தத்தை மான்செஸ்டர் யுனைடெட் அணி மேலும் ஒரு வருடத்துக்கு நீடித்துள்ளது.

ஸ்லாடன் இப்ராஹிமோவிச் கடந்த ஆண்டு பரிஸ் செயின்ட்-ஜெர்மைன் அணியிலிருந்து பரிமாற்றம் மூலம் மான்செஸ்டர் அணியுடன் இணைந்தார்.

2016-17 பருவகாலத்தில் இப்ராஹிமோவிச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 'இங்கிலீஷ் பிரிமியர் லீக்' தொடரில் 27 போட்டிகளில் 17 கோல்களை அடித்திருந்தார். பின்னர் காயம் காரணமாக அணியிலிருந்து விலகியிருந்தார்.

இதனால் மீண்டும் மான்செஸ்டர் அணியில் இடம்பிடிப்பாரா? என்ற கேள்வி எழுந்தது. இந்த மாதம் 31ஆம் திகதியுடன் அவருடனான ஒப்பந்தம் முடிகிறது.

இந்நிலையில், காயம் முழுமையாகக் குணமடைந்து போட்டிக்குத் தயாராகியுள்ள இப்ராஹிமோவிச்சை மேலும் ஒரு வருடத்துக்கு மான்செஸ்டர் அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

இதனால் இப்ராஹிமோவிச் 2017-18 பருவகாலத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக விளையாடுவார். இப்ராஹிமோவிச் 2011-2012 பருவகாலத்தில் மிலான் அணிக்காகவும், 2012 முதல் 2016 வரை பரிஸ் செயின்ட்-ஜெர்மைன் அணிக்காகவும் விளையாடியுள்ளார். பரிஸ் செயின்ட்-ஜெர்மைன் அணிக்காக 122 போட்டிகளில் விளையாடி 113 கோல்களை அவர் அடித்துள்ளார். (ஐ)

## நீங்க shut up பண்ணுங்க





ஓவியா... ஓவியா... ஓவியா... இவர்தான் 'பிக்பாஸ்' நிகழ்ச்சியின் நாயகி.

அந்த நிகழ்ச்சி மூலம் அனைவரையும் கவர்ந்த ஓவியா, அங்கு பேசிய வசனங்களும் சமூக வலைத்தளங்களில் சக்கை போடு போட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் ஓவியா, "நீங்க ஷட் அப் பண்ணுங்க" என்று கூறியது செம வைரலானது. தற்போது 'பலூன்' படத்தில் இதே வார்த்தையைப் பயன்படுத்தி யுவன் ஒரு பாடலை உருவாக்கவுள்ளார்.

இந்தப் பாடலை பாடப்போவது வேறு யாருமில்லை, தற்போது தமிழ் சினிமாவைக் கலக்கிக்கொண்டு இருக்கும் அனிருத் தான். இதனால், ரசிகர்கள் சந்தோஷத்தில் உள்ளனர். (ஒ)

## 'ஐபோன் 8' வெளியீடு



அப்பிள் நிறுவனத்தின் ஐபோன் 8 செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், வெளியீடு சார்ந்த தகவல்கள் இணையதில் வெளியாகியுள்ளன.

இதன் அறிமுக விழா செப்ரெம்பர் 12ஆம் திகதி நடைபெறும் என்றும், செப்ரெம்பர் 15 முதல் 22ஆம் திகதிகளில் முன்பதிவு செய்யப்படும் எனவும் கூறப்படுகிறது. (ஒ)

## 'பிக்பாஸ்' வீட்டுக்குள் இரு கொலையாளிகள்

'பிக் பாஸ்' நிகழ்ச்சி கடந்த சில நாட்களாக விறுவிறுப்பு இல்லாமல் சற்றுத் தொய்வாகச் சென்று கொண்டிருக்கிறது. 'பிக் பாஸ்' கொடுக்கும் டாஸ்க்களும் சொல்லும்படியில்லை.


இந்நிலையில் நேற்று 'பிக்பாஸ்', 'யார் அந்தக் கொலையாளி?' என்ற புது டாஸ்கைக் கொடுத்துள்ளார். இதில் வீட்டிலிருக்கும் அனைவருக்கும் ஒரு கதாபாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது.

வையாபுரி, காஜல் இருவரும் கொலையாளியைக் கண்டுபிடிக்கவுள்ளனர். ஆரவ் மற்றும் ஹரிஷ் ஆகியோரைக் கொலையாளிகளாக 'பிக் பாஸ்' தேர்ந்தெடுத்துள்ளார். (ஒ)





# இன்றைய கருத்தோவியம்




## பௌத்த சாசன அமைச்சு ஜனாதிபதியிடம் வரவேண்டும்

பௌத்த சாசன அமைச்சு ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட வேண்டுமென மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மூன்று பீடங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் மகாநாயக்க தேரர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

பௌத்த மத விவகாரங்களில் சிரத்தையுடன் செயற்பட்ட விஜேதாச ராஜபக்ச அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில் அந்த அமைச்சின் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள மிகவும் தகுதியானவர் ஜனாதிபதி மட்டுமே என தெரிவித்துள்ளனர்.

எனவே, ஜனாதிபதி பௌத்த சாசன அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென மூன்று பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள் விரும்புகின்றனர் என அஸ்கிரி பீடத்தின் பதிவாளர் நாயகம் கலாநிதி மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சனத்தொகையில் நூற்றுக்கு 75 வீதமானவர்கள் பௌத்தர்களாவர். பௌத்த மதத்தை பாதுகாப்பது சுலபமான விடயம் கிடையாது.

விஜேதாச ராஜபக்ச இந்தப் பணியை செவ்வனே மேற்கொண்டு வந்தார்.

பௌத்த சாசன அமைச்சின் அதிகாரிகள் நினைத்தவாறு தீர்மானம் எடுக்கவோ அல்லது ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களுக்கு தேவையான வகையில் செயற்படுவதற்கோ இடமளிக்காது அமைச்சின் சகல அதிகாரங்களும் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார். (உ)

## மேகமூட்டத்துடன் இன்றைய வானம்

நாட்டின் பல பாகங்களில் இன்று வானம் மேகமூட்டம் நிறைந்ததாகக் காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. வடக்கு, மேற்கு, சப்ரகமுவ, மத்திய, வடமேல் மாகாணங்களிலும், காலி, மாத்தறை மாவட்டங்களிலும் அடிக்கடி மழை பெய்யக்கூடும் என்றும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் கிழக்கு, ஊவா, வடமத்திய மாகாணங்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின்சில இடங்களிலும்மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடுமெனவும் திணைக்களம் மேலும்தெரிவித்துள்ளது. (உ)

## பிரதமர் அலுவலகத்தில் பட்டதாரிகள் சந்திப்பு

பட்டதாரிகளின் பிரதிநிதிகள் நேற்றுப் பிரதமரின் அலுவலகத்தில் பிரதமரின் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றைமேற்கொண்டனர். இதில் வடக்கு, கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளின் தலைவர்களுடன் ஏனைய மாகாணங்களின் தலைவர்களும் உறுப்பினர்களுமாக பதினொரு பேர் கலந்துகொண்டனர்.

அதன்போது தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்ததாகவும் அதற்கு அவர்கள் பிரதமருக்கு எழுத்து மூலம் அறிக்கை தயாரித்து சமர்ப்பிப்பதாகத் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டனர். இதன்போது பட்டதாரிகளினால் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. அந்த மகஜரில், 35 வயதெல்லையை 45ஆக உயர்த்த வேண்டும்., நுண்கலைப் பட்டதாரிகள் குறைவாக இருப்பதால் அவர்களுக்கான ஆசிரியத் தொழிலை வழங்க அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரசியல் வாதிகள் தரும் பெயர்ப் பட்டியல்களை நிராகரிக்க வேண்டும். பட்டதாரிகளுக்கு வருடம் தோறும் தொழில் நியமனங்களை வழங்குவதற்கான தேசிய கொள்கை மற்றும் தொழில் வழங்களை உருவாக்கி வேலையின்மை பிரச்சினைக்கு தீர்வினை வழங்க வேண்டும். அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக 20,000 பட்டதாரிகளை உள்ளீர்ப்பதாகக் கூறினார்கள். இதிலே தொழில் நியமனம் எப்போது வழங்கப்படும் என்பது பற்றியும் என்ன அடிப்படையில் உள்ளீர்ப்புச் செய்யப்படும் என்பது தொடர்பான செயற்பாடுகள் பற்றியும் தெளிவுபடுத்த வேண்டும். தொழில் வெற்றிடங்கள் 60,000 உள்ளன. எனவே, மீதமுள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்க வேண்டும். போராட்டத்தில் ஈடுபடும் போது எங்களைப் பேச்சுக்கு அழைத்தால் நாங்கள் எங்களது கோரிக்கை முன்வைத்து கலந்துரையாடுவோம்.- என்றுள்ளது. (உ)

### அமரதேவ ஆச்சிரமத்துக்கு

## அடிக்கல் நாட்டு விழா

அமரதேவ இசை ஆச்சிரமத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இதுதொடர்பில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஊடகத்துறை பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ன கருத்துத் தெரிவிக்கையில், "பண்டிற் அமரதேவவின் இறுதிக் கிரியையின் போது ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழி யதார்த்தமாகிறது.

அமரர் கலாநிதி பண்டிற் அமரதேவ இசைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்களைக் கௌரவிக்கும் வகையில் பண்டிற் அமர தேவ இசை ஆச்சிரமம் அமைக்கப்படவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்" - என்றார். (உ)

## போதை நோக்கி சிறுவர்கள் குறிவைப்பு!

போதைப்பொருள் நோக்கி சிறுவர்களே குறிவைக்கப்படுவதாக அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆய்வு மற்றும் விசாரணைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் பத்ராணி சேனநாயக்க தெரிவித்துள்ளார். போதைப்பொருளுக்கு இலக்காக்கப்படும் சிறுவர்களின் இந்த அபாய வயதெல்லை, கடந்த காலங்களில் 15 என்ற மட்டத்திலிருந்து தற்போது 11 வயது என்ற மட்டத்துக்கு இலக்கு வைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில், போதைப்பொருள் பாவனையால் ஏற்பட்டுள்ள அபாயங்களின் ஒரு பகுதியாக, கிழக்கு மாகாணத்திலும் போதைப்பொருள் குற்றங்கள் பற்றி விவரங்களை வெளியிட்டார் அவர்.

"போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கிழக்கு மாகாணத்தில், கடந்த ஆண்டு 2,483 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கடந்த ஆண்டு அம்பாறை மாவட்டத்திலேயே, ஆகக் கூடுதலானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் 1,110 பேரும், அடுத்தபடியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 696 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 677 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்' - என்றார். (உ)

## உலக வர்த்தக ஸ்தாபனம் அறிக்கை

இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சி காணப்படுவதாக உலக வர்த்தக ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. மொத்தமாக 164 நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி பற்றி உலக வர்த்தக ஸ்தாபனம் கவனம் செலுத்தியிருந்தது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் கொடுக்கல் வாங்கல்கள் திருப்திகரமாக உள்ளது என ஸ்தாபனத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் தெளிவான வளர்ச்சி தென்படுவதை ஆய்வுகள் புலப்படுத்துவதாக வர்த்தக ஸ்தானத்தின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கிழக்குப் பொலிஸ் அதிபராக கபில ஜயசேகர பதவியேற்பு

கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக எச்.டி.கே.எஸ்.கபில ஜயசேகர தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரை வரவேற்குமுகமாக பொலிஸ் அணிவகுப்பு மரியாதை நிகழ்வு நேற்று நடைபெற்றது, சமய வழிபாடுகளையடுத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். குறித்த நிகழ்வில் மதத் தலைவர்கள், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயகொட ஆராச்சி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.சுமித் எதிரிசிங்க கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்து ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து எச்.டி. கே.எஸ்.கபில ஜயசேகர புதிய கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)



## 78 வீடுகள் நாளை கையளிப்பு

மட்டக்களப்பு, முறக்கொட்டாஞ்சேனையில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சால் நிர்மாணிக்கப்பட்ட 78 வீடுகளுக்கான உரிமைச் சான்றிதழ்கள், புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் நாளை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவிருக்கின்றன. 25 வருடங்களுக்கு மேலாக முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் உயர்பாதுகாப்பு வலயமாக அடையாளமிடப்பட்டு, இரு வருடங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டது குறித்து தனியாருக்குரிய காணிகளிலே, இந்த வீடுகள்அமைக்கப்பட்டுள்ளன. இவ்வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வின்போது டி.எம். சுவாமிநாதன், 25 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும் வழங்கவுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## நாளை நாளும் கோளும்

26.08.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 10 ஆம் நாள்

பஞ்சமி மு.இ 11.28 வரை | சித்திரை மாலை 06.44 வரை | மரணயோகம் | ரிஷிபஞ்சமி
இராகுகாலம் 09.05 - 10.35 | சுபநேரம் 03.05 - 04.35 | எமகண்டம் 01.35 - 03.05

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மை | நலம் | வெற்றி | ஆர்வம் | அசதி | கீர்த்தி | இலாபம் | சாதனை | ஆதரவு | சலனம் | சுகம் | சாந்தம் |

எதிரொலி
Ethiroli

வெள்ளி, 25 ஒகஸ்ட் 2017

## அந்த நாள் ஞாபகம்.....!



### 1803.08.25

பனங்காமம் பற்று மன்னன் பண்டாரவன்னியன் விடத்தல் தீவைக் கைப்பற்ற எடுத்த முயற்சி மேஜர் வின்செண்ட் என்பவனால் முறியடிக்கப்பட்டது.

# வாள்வெட்டுத் தாக்குதல் இனியும் தொடரக்கூடாது

## அழகக சம்மேளனம் அறிக்கை

”உரும்பிராயில் அழககம் மீது இடம்பெற்றதைப் போன்ற வாள்வெட்டுச் சம்பவங்கள் இனியும் நிகழாதிருக்க வர்த்தக சமூகமும், பொது அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்” என வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் கோரியுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சம்மேளனம் வெளியிட்ட அறிக்கையில்,

“உரும்பிராயில் உள்ள அழககம் ஒன்றின் மீது கடந்த 22ஆம் திகதி இனம் தெரியாத சிலர் வாள்வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதன்போது அழகக நிலையமும் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலை வடமாகாண அழகக நிலையச் சங்கங்களின் சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தத் தாக்குதலால் எதிர்காலத்தில் எமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அச்ச நிலையும் தோன்றியுள்ளது.

தற்போது நாட்டில் சமாதானச் சூழல் நிலவுவதால் , இது வரைகாலமும் எவ்வித பயமுமின்றி வர்த்தக நிலையங்களைத் திறந்து தொழில்புரிந்து வருகிறோம்.

இப்படிப்பட்ட நிலையம் மதுபோதையில் வந்தவர்களால் உரும்பிராய் அழககம் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலை வர்த்தக சங்ககங்கள், பொது அமைப்புக்கள் என்பன எம்மோடு இணைந்து கண்டிக்க வேண்டும். வெறும் அறிக்கையுடன் நின்றுவிடாது, எதிர்காலத்தில் இப்படியான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாது தடுக்கவும் ஒன்றிணைய வேண்டும்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து, நீதியின் முன் நிறுத்துவதோடு, பாதிப்புக்குள்ளான அழகக நிலைய உரிமையாளருக்கும் உரிய நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொடுக்க ஆவன செய்ய அனைவரையும் வேண்டுகின்றோம். இனிவரும் காலங்களில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை நீதித்துறையினர் சட்ட நடவடிக்கை மூலம் உறுதிப்படுத்தி உதவுமாறும் வேண்டுகின்றோம்- என்றுள்ளது. (ஆ)

## பண்டார வன்னியன் நினைவுநாள் அனுஷ்டிப்பு



வவுனியாவில் தேசிய வீரன் பண்டார வன்னியனின் ஞாபகார்த்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வு இன்று காலை வவுனியாவில் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள அவரின் நினைவுத் தூபி அருகில் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, நினைவுத்தூபிக்கு, அதனை நிறுவிய வவுனியா சட்டத்தரணி சிற்றம்பலம் தலைமையில் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி.றோஹன புஸ்பகுமார, வட மாகாணசபை உறுப்பினர்களாக ப.சத்தியலிங்கம், ஜி.ரிலிங்கநாதன் உட்பட பலரும்கலந்து கொண்டிருந்தனர். (எ)

# 87 நாள் போராட்டம் நால்வர் உயிரிழப்பு

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமது உறவுகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி கிளிநொச்சியில் தொடர் போராட்டம் நடைபெற்று வருகின்றது. குறித்த போராட்டம் 187 நாட்களைக் கடந்துள்ளது.
போராட்டத்தில் ஈடுபட்டோரில் இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் எஞ்சியுள்ளவர்கள் உயிர் துறப்பதற்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவுகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆசிய தொழில்நுட்ப அறிவுகூட மாணவர்கள் மற்றும் சம உரிமை இயக்கத்தினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை நேற்றுச் சந்தித்தனர். இதன்போதே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போராட்டக் களமே வாழ்வாகிப் போயுள்ள நிலையில், நால்வர் உயிரிழந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது சங்க இணைப்பாளர் லீலாவதி ஆனந்தநடராஜா, தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். (எ)

## உதவித் திட்டம்

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்க அங்கத்தவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டினைக் கருதி செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது.
அதனடிப்படையில் காலபோக நெற்செய்கைக்கான விவசாயக் கடன் பத்தாயிரம் ரூபாவை தலைவர், செயலாளர் ஆகியோருடன் சிபார்சுடன் கூட்டுறவுக் கடனாகப் பெற முடியும். அதேவேளை, வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும்வகையில் மரக்கறி நாற்றுக்களை சங்கத்தில் பெறமுடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-11)

## நலன் விசாரிப்பு



சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டடுள்ள முன்னாள் அமைச்சர் அஸ்வரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேரில் சென்று நலன் விசாரித்துள்ளார். (உ)

# டெங்கு வாரம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் 29ஆம் திகதியில் இருந்து 31 ஆம் திகதிவரை சிறப்பு டெங்குநுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதன்போது பின்வரும் கிராம அலுவலர் பகுதிகளில் டெங்கு களத்தரிசிப்பு நடைபெறவுள்ளது.

29 ஆம் திகதி -வண்ணார்பண்ணை ஜே/98, ஜே/100, ஜே/102.
30ஆம் திகதி -நாவாந்துறை ஜே/85, ஜே/87, ஜே/88
31 ஆம் திகதி -ஜே/109, ஜே/108, ஜே/107.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த, களத்தரிசிப்புக்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (அ)

## விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டம்

விக்கினங்களை வேரறுக்கும் விநாயகப் பெருமான் அவதரித்த நாளாக ஆவணி விநாயகர் சதுர்த்தி போற்றப்படுகின்றது.
இந்துக்களின் முதற் கடவுளான விநாயகப் பெருமானின் அவதார தினமான விநாயகர் சதுர்த்தியை உலக வாழ் இந்துக்கள் இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் இலங்கையில் பல ஆலயங்களில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட்டது. குறிப்பாக மலையகப் பகுதியெங்கும் தீபங்கள் ஏந்தி விழா கொண்டாடப்பட்டதோடு சில ஆலயங்களில் மஞ்சளால் செய்த விநாயகர் சிலைகளை பூஜைக்கு வைக்கப்பட்டு பின்னர் நீர்நிலைகளில் கரைக்கப்பட்டன. (உ)



**வீட்டுக்குள்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். (ஆ)

**துன்னாலை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் ஆஜர்படுத்தினர் அதன்போது அவர்களுக்கு இன்றுவரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர்களது விளக்கமறியல் இன்று நீடிக்கப்பட்டுள்ளது. (எ-11)

**நீதி, புத்தசாசன...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் கருத்து வெளியிட்டதாகவும், நீதியமைச்சுக்கான செயற்பாடுகளை வினைத்திறனற்ற வகையில் மேற்கொண்டு வந்ததாகவும் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் விஜேதாச ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

அதற்கமைய விஜேதாச ராஜபக்ச வகித்து வந்த அனைத்து அமைச்சுப் பதவிகளில் இருந்தும் அவரை நீக்குவதற்கு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அனுமதி வழங்கியிருந்தார். இந்த நிலையிலேயே வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக இருந்த தலதா அத்துகோரள நீதியமைச்சராகவும், வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனவிலங்கு அமைச்சர் காமினி ஜெயவிக்ரம புத்தசாசன அமைச்சராகவும் பதவியேற்றுள்ளனர். (எ)

**விஜயகலாவை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாடத்தில் ஈடுபட்டோர் “இதுவா நல்லாட்சி”, “நீதியரசர் இளஞ்செழியனைச் சுட முயன்றவர்களை கைது செய்”, “ விஜயகலாவை கைது செய் ” போன்ற சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஆர்ப்பாட்டக்காரர்களால் மகஜர் ஒன்றும் ஐ.நா.அலுவலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. (எ)

**இராணுவத்து...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணையின்போது பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஊற்றுப்புலத்தைச் சேர்ந்த 6 பேரை இன்று கைது செய்துள்ளனர். (ஆ-10)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 25.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.